தமிழக சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1968 ஆகஸ்ட் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் **101, 102, 103, 104** பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Victoria Technical Institute

*** 105 *Q.*—THIRU A. M. RATA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—**

(*a*) whether the Government have appointed any representatives to the Victoria Technical Institute ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நிறுவனத்தின் தலைவரையும் அந்த நிறுவனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினரையும் அரசாங்கம் அவ்வப்பொழுது மூன்று ஆண்டு கால அளவுக்கு நியமிக்கிறது. தற்சமயம் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கீழ்க்கண்டவர்கள் அவரவர்களுக்கு நேரே குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து பதவி வகித்து வருகின்றனர் :—

தலைவர்

மாண்புமிகு திரு. நீதிபதி பி.எஸ். கைலாசம் .. **17-8-1966.**

உறுப்பினர்கள்

1. திருமதி சரோஜினி வரதப்பன், மைலாப்பூர், சென்னை. — **23-12-1966.**
2. திருமதி E. W. பிராகல், கௌரவச் செயலாளர், மகளிர் பணிக்குழு, விக்டோரியா தொழிற் பயிற்சிப் பள்ளி, சென்னை. — **15-1-1967.**
3. தொழில் வணிகத்துறை இயக்குநர், சென்னை. — **15-1-1967.**
4. கூட்டுறவுச் சங்கப் பதிவாளர், சென்னை .. — **15-1-1967.**
5. திருமதி ராஜி ரங்காச்சாரி, சமூகப் பணியாளர், ராயப்பேட்டை, சென்னை-14. — **15-1-1967.**

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, இந்த விக்டோரியா தொழில் நுட்பப் பள்ளிக்கு அரசாங்கம் ஏதாவது மானியம் கொடுக்கிறதா ? அப்படியென்றால் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது 1888–லே துவக்கப்பட்டது. நியமிக்கப்பட வேண்டியவர்களில் மூன்றில் ஒரு பகுதியினரை அரசாங்கம் நியமிக்க வேண்டுமென்றிருக்கிறது. மானியம்பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, what are the exact functions of this Institute ? Is it financed by the Central Government also apart from the aid which the State Government is giving ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசிடமிருந்தோ மாநில அரசிடமிருந்தோ நிதி கிடைப்பதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. இல. பலராமன் : அரசாங்கப் பிரதிநிதிகளாக நியமிக்கப்படும் போது எந்த விதி முறைகளின்படி அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் ? அதற்கான விதி முறைகள் ஏதாவது அரசாங்கம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது பற்றி அரசாங்கத்திடம் விதி முறைகள் இல்லை. விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் 1888–ம் ஆண்டிலே துவக்கப்பட்டது. அதில் மூன்றில் ஒரு பகுதியினர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். அதன்படி அரசாங்கத்தின் சார்பாக இருக்கக்கூடிய பேர்களை அறிவிக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இப்பொழுது இருக்கிற உறுப்பினர்கள் இன்னும் எத்தனை ஆண்டுகள் அந்தப் பதவிகளில் இருப்பார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூன்று ஆண்டு காலத்திற்கு இருக்கலாம்.

தமிழ், இந்தி ஆசிரியர்கள் சம்பளம்

* 106 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் ஆசிரியர்களுக்கும், இந்தி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் சம்பளத்தில் வித்தியாசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழ் ஆசிரியர்கள் சம்பளத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்ததா? அது பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ் ஆசிரியர்களும், இந்தி ஆசிரியர்களும் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பது தான் கேள்வி. தமிழ் ஆசிரியர்களைப்பற்றிப் பல்வேறு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. குறிப்பிட்ட கோரிக்கையைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், சென்னை மாநிலத்தில் அநேக இந்திப் பண்டிதர்கள் வேலையில்லாமல், ஏற்கனவே அவர்கள் வேலை பார்த்த பள்ளிகளிலே வேலை பார்க்க முடியாமல் இருப்பதனால் அவர்களை வேறு பள்ளிகளில் வேலையில் அமர்த்துவதற்குச் சுற்றறிக்கை ஏதாவது அரசு அனுப்பியிருக்கிறதா ?